# சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி

## OS. No. 391/2023

**29.04.2025**

## P.W.1- வீனா

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

பிரதிவாதியின் மகள் பெயர் ரேஷ்மா. நான் எழுமலை, திருவள்ளுவர் பாலிடெக்னிக் கல்லூரியில் படித்தபோது எனக்கும், ரேஷ்மாவுக்கும் பழக்கம். ரேஷ்மா மூலம் எனக்கு பிரதிவாதி பழக்கம். ரேஷ்மாவுக்கு திருமணம் ஆகிவிட்டது என்றால் சரிதான். நான் திருமண நிகழ்ச்சியில் கலந்து கொண்டேன். ரேஷ்மா நிச்சயதார்த விழாவிற்கு என்னை அழைக்காததால், நான் அவரது திருமணத்தில் கலந்து கொள்ளவில்லை என்றால் சரியல்ல. இரண்டு, மூன்று மாப்பிள்ளை வந்தபோது என்னுடைய ஆலோசனையால் அவரது திருமணம் தள்ளி போனது என்றால் சரியல்ல. அவ்வாறு திருமணம் தள்ளிபோனதால் இந்த திருமணத்திற்கு அழைக்கவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5 ஆவணம் பிரதிவாதி பெயரில் உள்ள கிரைய பத்திரம் என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.5 ஆவணம் கிரையப்பத்திரத்தில் கண்ட பிரதிவாதியின் கையெழுத்தும், தாவா புரோநோட்டில் உள்ள கையெழுத்தும் முரண்பாடாக உள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ,1ல் கையெழுத்தும், வா.சா.ஆ.5ல் கையெழுத்தில் ச, நி ஆகிய எழுத்துக்களில் முரண்பாடு உள்ளது என்றால் சரியல்ல. 11.06.2022ம் தேதி எனது வீட்டில் வைத்து மதிய வேளையில் 3.00 மணிக்கு பிரதிவாதிக்கு பணம் கொடுத்தேன். அதேபோன்று வா.சா.ஆ.4ல் ச, நி என்ற எழுத்துக்கள் தொடர்ச்சியாக உள்ளது என்றால் சரியல்ல. வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1ல் சாட்சிகள் என்ற இடத்தில் 1, 2 இடங்கள் காலியாக இருக்கிறது என்றால் எழுதியவர் சாட்சி கையெழுத்தை கீழே போட்டுள்ளார். சாட்சிகள் 1, 2 புரோநோட்டில் முன்வரவில்லை என்றால் சரியல்ல. எனக்கும், எனது தோழிக்கும் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக பிரதிவாதியின் குடும்பத்தில் பிரச்சினை உருவாக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் பணம் கொடுக்காமலும்,

பிரதிவாதியிடம் கையெழுத்து பெறாமலும் பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளதால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. ம.வி.இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது

ஒம் / P.S. ரஸ்கின் ராஜ்,
சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி

/ உண்மை நகல் /

சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.